புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

==============================================================

# கு.அழகிரசாமி சிறுகதையில் (தெய்வம் பிறந்தது) இடம்பெற்றுள்ள வரலாற்றுக் குறிப்புகள்

==============================================================

**முனைவர் ஆ. சந்திரன்,**
உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

**ஆய்வுச்சுருக்கம்**

படைப்பாளன் தான் சார்ந்த சமூகத்தின் வாழ்வியல் விழுமியங்களை ஆவணப்படுத்துகிற முயற்சியை நிச்சயமாக தன்னுடைய புனைவுகளில் (அறிந்தும் அறியாமலும்) பதிவு செய்வான். குறிப்பாக, மண் சார்ந்த புனைவுகள் அல்லது எதார்த்த வகை புனைவுகளில் இந்த போக்கு அதிக அளவில் அமையும். தான் வாழ்ந்த சமூகச் சூழலை மையமிட்ட கதைகளை எழுதி சென்றுள்ள கு.அழகிரிசாமி அவர்களின் சிறுகதைகளில் ஏராளமான வரலாற்று குறிப்புகளைப் பார்க்க முடிகின்றன. அவற்றிலிருந்து அக்கால சமூகத்தின் விழுமியங்களையும், முரண்பாடுகளையும், தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் மாற்றங்களையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. அந்த வகையில் தெய்வம் பிறந்தது என்ற சிறுகதை தொகுப்பில் இருந்து நமக்கு புலனாக வரலாற்று குறிப்புகளை மட்டும் ஆராய்கின்றது இக்கட்டுரை.

**முன்னுரை**

வரலாற்றைப் பதிவு செய்வதில் புனைவுகளுக்குத் தனித்த இடம் உண்டு. சங்க இலக்கியம் தொடங்கி சமகால இலக்கியங்கள் வரையிலான தமிழ் இலக்கிய மரபில் எல்லா காலங்களிலும் கவிஞர்கள் தங்கள் சமகால வரலாற்றுக் குறிப்புகளைத் தங்கள் படைப்புகளில் வாய்ப்பு கிடைக்கும் இடங்களில் எல்லாம் மிகச்சரியாக பயன்படுத்தி இருப்பதை நாம் பார்க்க முடிகிறது. குறிப்பாக, சில கவிஞர்கள் வரலாற்றைப் புனைவாக மாற்றி இருப்பதையும் நாம் பார்க்க முடிகிறது. சான்றாக, சங்க இலக்கியத்தில் பரணர், மாமூலனார் போன்றவர்களின் பதிவுகளை நாம் சுட்டலாம். சமகாலத்தில் சிறுகதைகள் என்ற புனைவிலக்கித்தில் புதுமைப்பித்தன், குலோத்துங்க சோழன், கி.ராஜநாராயணன்... என்று ஒரு பெரிய பட்டியலை நாம் முன் வைக்கலாம். அப்படித் தமிழ் இலக்கியச் சூழலில் (சிறுகதைகள்) வரலாற்றுக் குறிப்புகளைப் புனைவாக மாற்றிய அல்லது வரலாற்றுக் குறிப்புகளைத் தன்னுடைய புனைவில் இடம்பெறச் செய்தவராக கு. அழகிரிசாமியும் ஒருவர். அவரது சிறுகதைத் தொகுப்புகளில் ஒன்றான

'தெய்வம் பிறந்தது' என்ற சிறுகதையில் சற்றேறக்குறைய 50 ஆண்டு காலகட்டத்திற்கு முன்னர் தமிழகத்தின் திருநெல்வேலி தொடங்கி சென்னை வரையிலான கிராம x நகர என்ற பின்புலத்தில் பல்வேறு சமூக மக்களின் பண்பாடு மற்றும் சமூக முரண்பாட்டு வரலாற்று குறிப்புகள் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகின்றன. அவற்றைக் குறித்த ஒரு சிறு பார்வையை முன்வைக்கிறது இக்கட்டுரை.

**சமூக மாற்ற உணர்வும் பழமை வாத பிடிவாத குணமும்**

இக்கதைகளில் சொல்லப்பட்டுள்ள வரலாற்றுக் குறிப்புகளில் முதன்மையாகப் பார்க்கக் கூடியது சமூக மாற்றம் x மாறாப்பழமைவாதம். அதாவது, சமூக மாற்றம் குறித்த முன்னெடுப்புகளும் அதற்கு நேர் எதிரான மாறாத நிலைத்த பழமைவாத குணம் மேலோங்கி நிற்கும் வெளிப்பாடுகளும் எவ்வாறெல்லாம் சமூகத்தில் புழங்கிக் கொண்டுள்ளன என்பதை பற்றிய குறிப்புகள் கதைகளில் பரவலாகச் சுட்டப்பட்டிருக்கின்றன.

'குமாரபுரம் ஸ்டேஷன்' என்ற கதை மாற்றங்கள் எவ்வாறு தொடர்ச்சியாக நிகழ்ந்து வருகின்றன என்பதைப் பற்றிச் சொல்லுகின்றது. குறிப்பாக, கல்விப் பின்புலத்தில் உண்டான மாற்றங்கள். கோவில்பட்டியை அடுத்துள்ள ஒரு சிறு கிராமத்தில் உள்ள ஒரு பள்ளி ஆசிரியர் மாணவர்களுக்கு லியோ டால்ஸ்டாயை அறிமுகம் செய்திருக்கிறார். மாணவர்களின் உயர்வு குறித்து அந்தக் காலகட்டத்தில் அதுவும் ஒரு சிறு கிராமத்தில் தொடங்கிய அந்த முயற்சி என்பது நகரத்திலிருந்து குமாரபுரம் ஸ்டேஷனுக்கு நண்பரைப் பார்க்க வந்த சுப்பிராமையர் என்ற நகரப் பள்ளி ஆசிரியரை மிகவும் கவர்ந்திருக்கிறது. ரயில் பயணத்தில் அந்த மாணவர்களையும் அந்த மாணவர்களைத் தன்னுடன் அழைத்து வந்த ஒரு பெரியவர், அந்த மாணவர்களுக்கு ரயிலில் அறிமுகமாகிற ஒரு முஸ்லீம் தம்பதியர் (நகரத்தில் ஓட்டல் நடத்தும்) உதவ முன்வருவது என்ற ஒவ்வொன்றையும் நுட்பமாகக் கவனித்து வருகிறார் சுப்பிராமையர். நகரத்தில் படிக்க வரும் இடத்தில் அந்த மாணவர்களைப் பள்ளியில் சேர்க்கும் தலைமை ஆசிரியராக இருக்கும் அந்தச் "சுப்பராமையருக்குக் குதிரை வண்டி கிடைத்து விட்டது. அதில் ஏறிக்கொண்டு, வண்டி மூலை திரும்பும் வரையில் சிறுவர்களையே பார்த்துக்கொண்டு சென்றார். குமாரபுரம் ஸ்டேஷன், ஸ்டேஷன் மாஸ்டரின் தர்க்கங்கள் வேப்பம்பூ மணத்தோடு வீசிய காற்று, கரிசல் மண் மணமும் உயிரும் கொடுப்பது. ஹோட்டல்காரரின் தர்ம குணம், படிப்புக்கு அவரும் ஸ்டேஷன் மாஸ்டரும் கொடுத்த விளக்கம், கிராமத் தலைமையாசிரியர் தந்தையைப் போல் சிறுவர்களை நடத்தியது, டால்ஸ்டாயை டோல்ஸ்டோய்' என்று வாசித்த அறிவு', ஏழைப் போர்ட்டரின் விருந்துபசார அழைப்பு இப்படி எல்லாமே அவருக்கு ஞாபகத்துக்கு வந்துகொண்டிருந்தன.

இருபது நிமிஷ ரயில் பிரயாணத்தில், இருபது வருஷங்கள் படித்தாலும் தெரிந்துகொள்ள முடியாத எத்தனையோ அரிய விஷயங்களைத் தெரிந்துகொண்டது போன்ற ஆனந்த பரவசம்... கிராமத்து ஹெட்மாஸ்டரையும் ஹோட்டல் முதலாளியையும் போர்ட்டரையும் விடப் பெரிய வாத்தியார்கள் இந்த உலகில் இருக்க முடியுமா என்றுகூட அவருக்கு ஒரு நிமிஷம் தோன்றியது. அவர்களிடம் படிக்காத படிப்பையா இந்தச் சிறுவர்கள் இனி மேல் படிக்கப் போகிறார்கள் என்று தமக்குள் சொல்லிக் கொண்டார்'(பக்.117,18). என்ற வரிகள் மிகவும் முக்கியமானவையாக அமைந்திருப்பதைப் பார்க்கலாம். கல்வி என்பது மாற்றத்தை உருவாக்குகிறது என்பதும் அது பள்ளிக் கூடத்திற்குள் மட்டும் இல்லை தன்னைச் சுற்றி உள்ள புறச்சூழலையும் உள்ளடக்கிய ஒன்றாகவும் அது அமைந்திருக்கிறது என்ற உண்மையையும் உணர்த்துவதாக உள்ளது.

சமூக மாற்றத்தின் போக்கைப் பற்றிப் பிரதிபலிக்கிற மற்றொரு கதையாக 'வசந்தாவின் தந்தை' என்பது உள்ளது. ஏழ்மையான பின்னணியில் ஒரு கிராமத்திலிருந்து வரும் நடராஜன் என்பவன் தன்னுடைய கல்வி மற்றும் தொடர்ச்சியான வாசிப்பினால் பிரபலமாகிறான். சிவராமன் என்ற

வசந்தாவின் தந்தைக்கு அறிமுகமானதுடன் அவருடைய வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்லுகிறான். தொடர் வாசிப்பின் வெளிப்பாடுகள், இலக்கியம் குறித்த அவனது பார்வையால் கவரப்படும் சிவராமனின் மகள் வசந்தா அவனை விரும்புகிறாள். ஏழ்மையைக் காரணங்காட்டி மறுக்கின்றவனிடம் தன்னுடைய காதலைப் புரியவைத்து ஏற்கச் செய்வதுடன், காலத்தின் தேவைக்கு ஏற்பச் சமூகத்தில் நிகழ வேண்டிய மாற்றம் குறித்துத் தன்னுடைய தந்தைக்கு உணர்த்தி அவரது சம்மதத்தையும் பெறுகிறாள். இவ்வாறு தொடர்ச்சியாக சமூகத்தில் நிலவும் சமூகத்தின் படிநிலையையும் விலக்கி ஏழ்மை x செல்வாக்கு இரு எதிரெதிரான மனநிலைகளை ஒன்றிணைக்கின்ற பாலமாகக் கல்வி விளங்குகிறது என்பதை இக்கதை உணர்த்துகிறது. ஆக, கல்வி என்பது சமூக மாற்றத்தின் அடித்தளம். அந்த அடித்தளத்தின் வழி நிகழ்ந்த இருவிதமான மாற்றங்களை இவ்விரு கதைகள் உணர்த்தி நிற்கின்றன.

அதே நேரம் மற்றொருபுறம் மாற்றம் என்பது மனிதனிடம் இயல்பாகவே இருக்கக்கூடிய ஒன்றுதான். அதாவது தெய்வ நம்பிக்கை, நேர்மையாக இருப்பது என்பன போன்ற குணங்கள்தான் மனிதனை அடுத்தடுத்த உயர்நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்துகிறது என்பதைத் 'தெய்வம் பிறந்தது' என்ற கதை சொல்கிறது. ராமசாமி ஐயர் தன்னுடைய மகன் ஜெகநாதன் என்ற தந்தை மகன்களுக்கிடையில் நிகழும் உரையாடலின் பின்புலத்தில் இந்த உண்மை சுட்டப்பட்டிருக்கிறது. குடும்பத்துடன் ஒரு புகைப்படம் எடுத்து வீட்டின் சுவரில் மாட்ட வேண்டும் என்ற ஆசையால் மாதா மாதம் சிறுக சிறுக சேர்த்த பணத்தைக் கொண்டு ஸ்டுடியோவிற்குச் சென்று படம் எடுத்துத் திரும்பும்போது சிறுவனான ஜகந்நாதன்,

''நம்ப வீட்டிலே நம்ப படம் எதுக்கப்பா?" என்று கேட்க ஐயர் திகைத்துவிட்டார். அவருடைய மனைவியோ அவன் சிறுபிள்ளைத்தனமாக எதையோ அர்த்தமில்லாமல் சொல்லுகிறான் என்று எண்ணித் தன் வேலையைக் கவனிக்க உள்ளே போய்விட்டாள்.

"ஏண்டா கண்ணு, அப்படிக் கேட்கிறே? நம்ப படத்தை நம்ப வீட்டிலே மாட்டாமல் யார் வீட்டிலே மாட்டுறது? உம்?""அப்படின்னா, காந்தித் தாத்தா படத்தைக் காந்தித் தாத்தா வீட்டிலேதானே மாட்டணும்? பாலமுருகன் படத்தைப் பாலமுருகன் வீட்டிலேதானே மாட்டணும்?"

ஐயருக்கு என்ன பதில் சொல்லுவது என்றே தெரிய வில்லை.ஜகந்நாதன் அவருடைய பதிலுக்காகக் காத்துக் கொண்டிராமல், தான் கேட்க நினைத்த மற்றொரு கேள்வியையும் உடனே கேட்டுவிட்டான்; "வேலாயுதம் படம், காய்கறிக்காரர் படம், கோமதிநாயகம் (வெளுப்பவன்) படம், ஐயாவு (கோவில்பட்டி க்ஷவரத் தொழிலாளி) படமெல்லாம் ஏன் மாட்டி வைக்கல்லேப்பா? அவர்ளும் நமக்கு நன்மைதானே செய்யறா?..."

ஐயரின் உடம்பெல்லாம் சிலிர்த்தது. பதில் பேச முடியவில்லை. வாய் குழறியது. கண்ணீர் ததும்ப மகனைக் கட்டி அணைத்துக்கொண்டு காந்திஜியின் படத்தையும், பிரணவத்தின் மெய்ப்பொருளை மகேஸ்வரனான தன் தந்தைக்கு விளக்கியருளிய பாலமுருகனின் படத்தையும் ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தார்; அப்படியே மகுனை வாரி எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டார்.

"ஜக்கு! என் வயிற்றிலும் தெய்வம் பிறக்குமா. ஜக்கு!... இன்று பிறந்து விட்டதே! என் கண்காணப் பிறந்து விட்டதே!" என்று சொல்லிக்கொண்டு, மனைவியிடம் ஓடினார் ராமசாமி ஐயர்'' (பக்.12,13). என அந்தக் கதை முடிகிறது. தொடர்ச்சியான சமூக மாற்றம் அல்லது சமூக முன்னேற்றம் என்பது கல்வி

பின்புறத்திலும் இயல்பாக இருக்கக்கூடிய நல்ல குணங்கள், நல்ல நம்பிக்கைகள் அடிப்படையிலும் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதற்கான காரணிகளாக இருக்கின்றன என்ற உண்மைகளை மேற்கண்ட இந்த கதைகள் விளக்குகின்றன.

இப்படி தெய்வம் பிறந்தது என்ற இந்த சிறுகதை தொகுப்பில் உள்ள ஏழு கதைகளில் மூன்று கதைகள் (தெய்வம் பிறந்தது, வசந்தாவின் தந்தை, குமாரபுரம் ஸ்டேஷன்) சமூக மாற்றம் குறித்த உணர்வு தொடர்ச்சியாக நிகழ்ந்து வருவதையும் அவ்வாறான மாற்றத்தில் உள்ள நிறை குறைகளை மிக நுட்பமாகச் சொல்லிச் செல்வதையும் பார்க்க முடிகிறது. இது இவ்வாறு இருக்க, மறுபுறம் பழமைவாதம் மேலோங்கி இருப்பது, நான்தான் உயர்ந்தவன்; நான் என்ற தற்பெருமை; என்னுடைய மூதாதையர்; என்னுடைய பரம்பரை பெருமை என்பன போன்ற பழமைவாத வறட்டு கௌரவம் பற்றியும் கதைகளில் சுட்டப்பட்டுள்ளன. அதற்கு மிகச் சிறந்த உதாரணமாக 'சுயரூபம்' என்ற கதையைச் சுட்டலாம். கதையில் வரும் வீ.க. மாடசாமி தேவர் என்பவர் தன்னுடைய குலப் பெருமையும் தன்னுடைய செல்வாக்கின் பெருமையும் பேசிக்கொண்டு கடந்த கால நினைவுகளிலே வாழ்கிற மனநிலை கொண்டவராகச் சுட்டப்படுகிறார். தன்னுடைய தந்தை மற்றும் தன்னுடைய தாத்தாவினுடைய (வீரப்பதேவர், கந்தசாமி தேவர்) பெருமையைப் பற்றிப் பேசிக்கொண்டு திரியும் அவர் நிகழ்காலத்தில் தன்னைச் சுற்றி உள்ளவர்களிடம் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் அவதிப்படுகிறார். தன்னுடைய வறுமையப் போக்கிக்கொள்ள எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாத அவர் தன் குலப்பெருமையை மட்டும் திரும்பத் திரும்பப் பிறரிடம் கூறி வருகிறார்.

வறுமையின் உச்சத்தில் இருக்கும் அவருக்கு ஒரு நாள் முருகேசம் பிள்ளை என்பவருடைய ஓட்டலில் நான்கு இட்டலி கடனுக்காக நாள் முழுவதும் காத்துக் கொண்டிருக்கிற நிலை உண்டாகிறது. காலை முதல் இரவுவரை காத்திருந்தும் உணவு கிடைக்கவில்லை. இந்தப் பின்னணியிலும் அவரது வறட்டு கௌரவம் அவரை விட்டுவிலகவில்லை என்பதாகக் கதை நகர்வு என்பது அமைகிறது. உண்மையில் இது மிக முக்கியமான ஒரு குறிப்பாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டி உள்ளது. 'குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற பழமொழியை நாம் கேள்விப்பட்டிருப்போம். அந்தப் பழமொழிக்கு மிகப் பொருத்தமானவர்தான் வீ.க. மாடசாமி தேவர். நான்கு இட்டிலிக்காகக் காலை முதல் இரவு கடை அடைக்கும்வரை காத்துக் கிடந்தும் அது கிடைக்காததால் ஆத்திரமடைந்து கடைசியில் கடைக்காரர் முருகேசம் பிள்ளையிடம் சண்டையிடுகிறார். அவரிடம் அடிபட்டு உதைப்பட்டு பிறகு கேவலப்பட்டுச் செல்லுகிற பின்னணியில் கூட அவரது வறட்டு கௌரவம் அவரை விட்டுப்போகவில்லை. அது இவ்வாறு வெளிப்படுகிறது, ''இனி என்ன கஷ்டம் வந்தாலும் வரட்டும் என்ன தான் வந்து விடும் தலைக்கு மிஞ்சின ஆக்கினையா. கோவணத்துக்கு மிஞ்சின தரித்திரம் இந்த அற்ப பயல் யாசகமாகக் கொடுத்த இட்லியை வாங்கி நாய் தீனி தின்னாமல் இருந்தோமே. இந்த கடும் பசியிலும் அது போதும். மற்ற கேவலம் எது வந்தாலும் வரட்டும் என்று தனக்கு தானே பேசிக் கொண்டு தள்ளாடித் தள்ளாடி வீட்டை நோக்கி நடந்து(ப.37)' சென்றதாகக் கதை முடிகிறது. காலை முதல் இரவு கடை அடைக்கும் நேரம் வரை நான்கு இட்லிக்காகக் காத்துக் கிடந்த பின்னணியில் இட்லி கொடுக்க மறுக்கின்ற முருகேசம் பிள்ளையிடம் சண்டையிட்டு அடி வாங்கிய பின்னணியில் இந்த வறட்டு கௌரவ உரையாடல் அவனுக்குள் நிகழ்கிறது என்பது கவனிக்கத்தக்க ஒன்று.

**வறுமை நேர்மை பற்றிய பதிவுகள்**

கதை எழுதப்பட்ட காலகட்டத்தில் உள்ள சமூகத்தின் மிக முக்கியமான அங்கமான வாழ்வியல் தேவைக்கான அடித்தளமாக அமையக்கூடிய பொருளாதார சூழலைப் பற்றித் தொகுப்பில் உள்ள கதைகள் சொல்லிச் செல்கின்றன. இக்கதைகளில் உள்ள 'தம்பி ராமையா' என்ற கதையும், 'இருவர்

கண்ட ஒரே கனவு' என்ற இரண்டு கதைகளும் வருமையால் வாழக்கூடிய மக்களின் வாழ்க்கையையும் அவர்களின் இன்னல்களையும் கோடிட்டுக் காட்டிச் செல்கின்றன. 'தம்பி ராமையா' என்ற கதையில் கல்வி பயில வெளியூர் செல்லும் பூர்ணலிங்கம் பிள்ளை வடிவம்மாள் தம்பதியரின் மூத்த மகனான சுந்தரம் படித்து முடித்து வேலை கிடைக்காமல் அவதிப்படுகிறான். பின்னர் ஒரு வேலை கிடைக்கிறது. அந்த வேலையில் கிடைக்கும் ஊதியம் அவனது அன்றாடத் தேவைகளைப் பூர்த்திச் செய்யவே போதவில்லை. அப்படிப்பட்ட வாழ்க்கை வாழும் அவன் விடுமுறையில் ஒரு நாள் தன் வீட்டிற்குச் செல்கிறான். அவனுக்கு வீட்டில் அளிக்கப்படும் விருந்துபசரிப்பைக் கண்டு ஏக்கம் கொள்கிறான் அவனது தம்பி ராமையா. அவனது ஏக்கத்தில் அவ்வீட்டின் வறுமை வெளிப்படுகிறது. (அதைவிட ஆழமாக வேறு வகையில் பதிவு செய்திருக்க முடியாது) அதுவரை தனக்கு அளிக்கப்பட்ட உணவிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அந்த உணவைச் சுவைக்கும் அச்சிறுவன், அண்ணன் சுந்தரம் மீண்டும் வெளியூர் திரும்பிச் செல்லத் தயாராகிற பொழுது அவனுடன் செல்ல அடம் பிடிக்கிறான். காரணம், அவன் வந்திருந்த நாட்களில் புதிதாக உண்ட அத்தகைய உணவைத் தொடர்ந்து உண்ண முடியும் என்று அவன் மனம் கருதியது. அது அவனை ரயில் நிலையம் வரைப் பின்தொடர வைத்தது.

இவ்வாறு ராமையா என்ற சிறுவனின் பிடிவாத குணம் வழி அக்குடும்பத்தின் வறுமையை ஆழமாகப் பதிவு செய்திருக்கின்றது இக்கதை. கல்வி காற்றால் தன்னுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும் என்று நாம் ஒருபுறம் சொல்லிக் கொள்ளுகிற அதே வேளையில் உரிய வேலை கிடைக்காமல் கற்றவர்கள் அவதியுறுகிற நிலையும் சமூகத்தில் உள்ளது. அத்தகைய ஒரு சூழலை 1980 - களில் இருந்தே மக்கள் சந்தித்திருக்கிறார்கள் என்ற ஓர் உண்மையை இக்கதை நமக்கு உணர்த்தும் உண்மை வரலாறாக உள்ளது. சுருக்கமாகச் சொல்வதானால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இன்மை என்பது இன்றைய காலகட்டத்தின் உருவான பிரச்சனை மட்டுமின்றி அது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிற ஒன்றுதான் என்ற உண்மையை உணர்த்தும் கதையாக இது உள்ளது.

வறுமை இருந்தாலும் தன்னுடைய நேர்மையை விட்டுக் கொடுக்காமல் உண்மையாக இறை நம்பிக்கையோடு வாழ்வது என்ற மக்களின் வாழ்வியல் முறையைத் 'தெய்வம் பிறந்தது' என்ற கதை உணர்த்துகிறது. ராமசாமி ஐயர் தன்னுடைய மகன் ஜெகநாதன் தன்னுடைய மனைவி ஆகியோருடன் சேர்ந்து ஒரு புகைப்படம் எடுக்க வேண்டும் என்பதற்காகத் தனது மாத ஊதியத்திலிருந்து சிறு சிறு தொகையைச் சேர்த்து வரும் அவரது செயல்பாடு ஒரு புறம் இன்னொரு புறம் அந்த குறைந்த வருமானத்திலும் மிக நேர்மையாக வாழ்கிற வாழ்வியல் முறை தன்னுடைய மகனிடம் இறை உணர்வைக் கண்ட பொழுது அடைகிற ஆனந்தம் என்ற இவை எல்லாம் ஒரு குடும்பம் எவ்வாறு இருக்க வேண்டும் பணம் மட்டுமே வாழ்க்கை இல்லை என்ற ஒரு ஆழமான உண்மையை இது சொல்லி செல்வதாக உள்ளது. (குறிப்பு - பதினைந்து ரூபாய் சேர்ப்பதற்கு ஐந்து மாதங்கள் தேவைப்பட்டது)

இதற்கு நேர் எதிராகப் பணம்தான் வாழ்க்கை என்பதான ஒரு போக்கையும் இக்கதை தொகுப்பில் உள்ள ஒரு கதை சொல்லுகிறது. 'இதுவும் போச்சு சிவ சிவா' என்ற கதையில் சங்கரையர் என்பவர் வாழ்வின் மீதான அதீத எதிர்பார்ப்புகள் கொண்டவராக உள்ளார். அதன் விளைவு தனது மகளின் காதலைப் பொருளாதாரப் பின்னணியால் தடுத்து நிறுத்துகிறது. அவரது பேராசை உயர்ந்த இடத்தில் அவளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற வேட்கை காரணமாகப் பொருளாதார வலிமை பெற்ற பின்னர் வேண்டாம் என்று விலக்கியவரையே இரண்டாந்தாரமாக மணம் முடிக்கவும் முன்வருகிறது. இவ்வாறு கொள்கையற்ற பகட்டான வாழ்வை விரும்புகிற ஒரு நபரின் வாழ்கையைப் பற்றி (முரண்பாடான போக்கை) சித்தரிக்கிறது இக்கதை.

அதாவது, பணம்தான் வாழ்க்கை. ‘பணமில்லை என்றால் பிணந்தான்’ என்ற பழமொழியை மறுத்து பணம் மட்டுமே வாழ்க்கை இல்லை என்ற உண்மையை நிலை நிறுத்துகிறது. மேலும்,

‘இருவர் கண்ட ஒரே கனவு’ என்ற கதையில் வேலப்பன் என்ற ஒரு ஏழை தன்னைவிட ஏழ்மையில் இருக்கக்கூடிய பெற்றோரை இழந்த மூத்தவன் சிறியவன் என்ற இரு குழந்தைகளை அரவணைக்கும் பின்புலத்தில் வறுமையிலும் பிறருக்கு உதவும் மனம் கொண்ட மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்ற உண்மையைச் சொல்லிச் செல்வதான ஒரு போக்கையும் நான் பார்க்க முடிகிறது. இப்படி பொருளாதாரத்தை மையமிட்டுச் சூழலும் மனித வாழ்க்கையின் பல பரிணாமங்களைக் கதைகள் சொல்லி செல்லுகின்றன.

முடிவுரை

கு. அழகிரிசாமியின் தெய்வம் பிறந்தது என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதைகளில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டத்தில் நடந்த பல்வேறு சமூக பண்பாட்டு வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெற்றிருப்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. சென்னை, கோவை, திருநெல்வேலி, கோவில்பட்டி, குமாரபுரம் போன்ற என்று நகர x கிராம பின்புலத்தில், படிக்காத பாமர x படித்த நாகரிகம் அடைந்த, மேற்கத்தியக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொண்ட என்ற பல்வேறு பரிமாணங்களில் பின்புலத்தில் சில உண்மைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவற்றில் கல்வி பின்புலத்தில் நேர்மையான வாழ்க்கையை வாழ்வது, வறட்டு பிடிவாத குணத்தோடு சமூக அந்தஸ்து, கௌரவம் என்ற பின்னணியில் பழமையைத் தூக்கிச் சுமந்து கொண்டிருப்பது, புதிய மரபை எதிர்நோக்கி அடியெடுத்து வைப்பது என்பன போன்ற எதிரும் புதிருமான செயல்பாடுகளின் வெளிப்பாடுகள் இடம்பெற்று இருப்பதைப் பார்க்க முடிகின்றது. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் மேலே நாம் இக்கட்டுரையில் சுருக்கமாக அடையாளங்கண்டோம்..

**துணைநின்ற நூல்கள்**


1. இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், முனைவர் கா.பஞ்சாங்கம், 2016 (இரண்டாம் பதிப்பு), அன்னம் வெளியீடு, தஞ்சாவூர் - 613 007.

2. தெய்வம்பிறந்தது, கு. அழகிரிசாமி, 1987, ஐந்திணைப் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

3. பரணர், வே.வேங்கடராஜூலு ரெட்டியார், 1989 (மறுபதிப்பு), உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113..